**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2025–ம் வருடம் செப்டம்பர் திங்கள் 03–ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக பி.சா.3–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95–வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: K.M.ரவிச்சந்திரன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு பி.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.07.2008 தேதியிட்ட தமிழ்நாடு அரசு அளுநருக்காக தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட தும்பிவாடி பஞ்சாயத்து தலைவருக்கு முன்னாள் பாக்கியஸ்தர் K.M. ரவிச்சந்திரன் எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணம் (Gift Deed No.4247/2008) சான்றிட்ட நகல் பி.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தும்பிவாடி கிராமத்தில் கிரையம் வாங்கிய சொத்துக்களை தவிர எனக்கு வேறு எதுவும் சொத்துக்கள் கிடையாது. 11.02.2008 அன்று 13 ஏக்கர் 81

செண்டை பி.வா.சா.ஆ.8 மூலம் வாங்கியுள்ளேன். நான் மேற்சொன்ன கிரையத்தை என் தனிப்பட்ட முறையில் வாங்கவில்லை உறுப்பினருக்காக சொத்தினை வாங்கியுள்ளேன். பி.வா.சா.ஆ.8 ல் நீங்கள் கூறியது போல் ஆவணத்தில் காணப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன நீங்கள் கிரையம் வாங்கிய சொத்தில் 1 ஏக்கர் 93 செண்ட் தானமாக அதாவது 84,167 ½ சதுர அடி பி.வா.சா.ஆ.9 மூலம் 1ஆம் பிரதிவாதிக்கு தானம் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 11.02.2008 ல் 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் 4 ஏக்கர் 81 செண்ட்டை கிரையம் பெற்றுள்ளார். மேற்சொன்ன நீங்கள் வாங்கிய நிலத்தில் தானம் கொடுத்த நிலத்தில் நீங்கலாக மீதம் உள்ள நிலத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் வீட்டு மனைகளுக்கு அரசிடம் இருந்து அங்கீகாரம் பெறவில்லை நான் மனு செய்துள்ளேன். நீங்கள் மனு செய்ததற்காக உள்ள ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் தானம் கொடுத்துள்ள நிலம் நீங்களாக மீதம் உள்ள நிலத்தை 3 ஆம் தரப்பினருக்கு விற்றவர்களுக்கு ராமச்சந்திரா மிஷன் அங்கத்தினர் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் நான் தனிப்பட்ட நபர்களுக்கு விற்றுள்ளேன். அவர்கள் ராமச்சந்திரா மிஷனின் அங்கத்தினர்கள் ஆவார்கள். நான் 3 ஆம் தரப்பினருக்கு விற்க கிரையத்தொகைகள் உங்களிடம் தான் உள்ளது என்று சொன்னால் நான் கிரையத்தொகையினை எனக்கு விற்ற நபரிடம் கொடுத்துவிட்டேன். நீங்கள் 11.02.2008 அன்று பி.வா.சா.ஆ.8 மூலம் கிரையம் வாங்கிய போது உங்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் முன்பணம் கொடுத்தேன் கிரையம் பெற்ற தினத்தன்று முழுபணம் கொடுக்கவில்லை. சாட்சி மீண்டும் முழுத்தொகையை கிரையத்தொகையாக

கொடுத்ததாக கூறுகிறார். பிரதிவாதிகள் 3 முதல் 107 வரையுள்ள நான் கிரையம் கொடுத்த நாள் அன்று 3 முதல் 107 வரையுள்ள நபர்கள் என்னிடம் கொடுத்த கிரைய தொகையினை வாங்கி அவர்கள் கொடுத்த கிரையத் தொகையினை பி.வா.சா.ஆ.8 க்கு உரிய தொகையை நான் எனக்கு கிரையம் கொடுத்தபோது அன்றைய தேதியில் கொடுத்துள்ளேன். நீங்கள் 3 முதல் 107 வரையுள்ள பிரதிவாதிகளுக்கு தானம் கொடுத்த பி.வா.சா.ஆ.36 தேதிக்கு பிறகு தான் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. நீங்கள் 2 முதல் 107 வரையுள்ள பிரதிவாதிகளிடமிருந்து எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் வாங்கியுள்ளீர்கள் என்று கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.7 வரை உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை கிரையம் வாங்கினேன். பி.வா.சா.ஆ.4 முதல் பி.வா.சா.ஆ.7 வரை உள்ள ஆவணங்களில் கண்டுள்ள வழக்கு சொத்து ஆனூர் அம்மன் காடு என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 முதல் 7 வரையுள்ள ஆவணத்திற்கு முந்தைய தாவா சொத்திற்குரிய ஆவணங்களை பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் தாவா சொத்தினை வாங்குவதற்கு முன்பாக வழக்கறிஞர் சட்டக்கருத்து கேட்டுதான் வாங்கினேன். பி.வா.சா.ஆ.3 முதல் 7 வரையுள்ள ஆவணங்களைத்தான் நான் வழக்கறிஞரிடம் கருத்துரை பெறுவதற்காக கொடுத்த ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவில் 1892 அதாவது வா.சா.ஆ.5 பற்றி குறிப்புள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தை வழக்கறிஞர் கருத்துரை பெற்ற போது கொடுத்திருந்தேன். வழக்கறிஞர் சட்டக்கருத்துரையை எழுத்துப்பூர்மாகத்தான் கொடுத்திருந்தார். வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி நீங்கள் வழக்கறிஞர் கருத்துரை பெற்ற பிறகு பார்த்தீர்களா

என்றால் நான் என்னுடைய வழக்கறிஞர் மணிகண்டசாமியிடம் கருத்துரை பெற்ற போது அவர் திருச்சி, தில்லைநகரில் உள்ள திரு.கண்ணன் வழக்கறிஞரிடம் தாவா சொத்துக்குரிய கருத்துரையை பெற்றேன். என் வழக்கறிஞர் மணிகண்டசாமி எனக்கு எழுத்துப்பூர்வமாக கொடுத்தார். திருச்சி, தில்லைநகரில் உள்ள திரு.கண்ணன் என்பவரை நீங்கள் சந்திக்கவில்லை என்றும் அவரை சந்தித்ததாக கெட்ட உள்நோக்கத்துடன் சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் நானும் என் வழக்கறிஞருடன் சென்று பார்த்தேன். பி.வா.சா.ஆ.36 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பஞ்சாயத்துக்கு தான செட்டில்மெண்ட் பெற்றுக்கொண்டு தீர்மானம் போட்டார்களா என்றால் போடவில்லை. தாவா சொத்தில் தியான மண்டபம் இருப்பது 2 ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் கண்ட 4 ஏக்கர் 81 செண்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களில் உங்களுக்கோ, உங்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றும் சுவாதீனமும் இல்லை என்று சொன்னால் தெரியாது.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.